**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of BNSS)**

**C.C. No. 41/2025**

Name : சுரேஷ் (PW–1 Cross ) Date : 10.02.2026

Husband Name : சின்னையா சுந்தரம் :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. தரங்கம்பாடி தாலுக்கா, எருக்கட்டாஞ்சேரி கிராமத்தில் புல எண். 505/2A ல் உள்ள சொத்து எனது தாயார் உஷாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனது தாயார் எதிரியின் மனைவி நாகலெட்சுமிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது எனது தாயார் நாகலெட்சுமிக்கு 01.07.2024ல் எழுதிக்கொடுத்த கிரய சாசனம் என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **எமசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கிரய ஆவணத்தில் முதல் சாட்சி கையொப்பம் எனது சகோதரர் சுதர்சனும், இரண்டாவது சாட்சி கையொப்பம் நானும் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணத்தில் கிரய தொகை முழுவதும் நான் தங்களிடம் ரொக்கம் பெற்றுக்கொண்டு என் பற்றாகிவிட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் காசோலை தொகையும் சேர்த்து தான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். காசோலை கொடுத்திருந்தால்

2. அந்த விபரங்களை கிரய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி கிரய ஆவணம் தொடர்பாக எதிரி எந்த காசோலையும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாயாரிடம் எதிரியின் மனைவி கிரய தொகையாக ரூ. 19,24,000/– கிரய பேசியதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் ரூ.

19,24,000/- என கிரய பேசவில்லை என்றாலும், கிரய பாக்கி தொகையான ரூ. 6,24,000/-ற்கு எதிரி காசோலை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எங்களது சொத்திற்கு கீழ்புறம் சாவித்திரி அம்மாள் சொத்து உள்ளது என்றால் சரிதான். எதிரியின் மனைவி கிரயம் பெற்றிருக்கும் சொத்திற்கும் மெயின் ரோட்டிற்கும் இடையில் சாவித்திரி அம்மாளின் சொத்து உள்ளதால் அந்த சொத்தை கிரயம் பெற்றால் தான் எதிரியின் மனைவி கிரயம் பெற்றுள்ள சொத்தினை அனுபவிப்பதற்கு வசதியாக இருக்கும் என்றால் சரியல்ல.

3. சாவித்திரி அம்மாளிடமிருந்து சொத்தை நான் எதிரிக்கு கிரயம் பெற்று தருவதாக உறுதி அளித்தேன் என்றால் சரியல்ல. நான் உறுதி அளித்ததன் அடிப்படையில் எதிரியின் மனைவி எனது அண்ணன் சுதர்சனனின் வங்கி கணக்கிற்கு ரூ. 8,50,000/-ஐ 20.02.2024 அன்று அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. மீதமுள்ள தொகையான ரூ. 6,24,000/-ற்கு தான் எதிரி வழக்கு காசோலையை எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி தொகையையும் காசோலையையும் பெற்றுக்கொண்ட நாங்கள் எதிரிக்கு சாவித்திரி அம்மாளிடமிருந்து சொத்தை கிரயம் பெற்று கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் சாவித்திரி அம்மாளிடமிருந்து எனது தாயார் பெயரில் அந்த சொத்தை கிரயம் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். அதனால் எதிரியின் மனைவி சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் அவர் எனது சகோதரர் வங்கி கணக்கிற்கு அனுப்பிய ரூ. 8,50,000/- ஐ திருப்பி தரக்கோரி அசல் வழக்கு எண். 88/2025 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4. நான் உறுதி அளித்தவாறு சாவித்திரி அம்மாளிடமிருந்து எதிரிக்கு சொத்தை கிரயம் பெற்றுக்கொடுக்காததால் எதிரிக்கு கொடுத்த வழக்கு காசோலைக்குரிய தொகையை பணமாக்க வேண்டாம் என கோரி வங்கியில் மனு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் காசோலையை வசூலுக்காக செலுத்தியபோது Payment Stopped by Drawer என திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தாயாரிடமிருந்து கிரயம் பெற்ற சொத்திற்கு எதிரியின் மனைவி காசோலை கொடுத்திருந்தால் எனது தாயார் பெயருக்கு தான்

காசோலையை கொடுத்திருப்பார்கள் என்றாலும், எனது பெயருக்கு கொடுத்திருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. காசோலை திருப்பபட்டது குறித்து நான் எனது வழக்கிறஞர் மூலம் 07.08.2024 அன்று அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு எதிரி கடந்த 14.08.2024 அன்று பதில் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பிலேயே மேற்கூரிய அனைத்து விபரங்களையும் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் உள்ள விபரங்களை மறுத்து நான் மறுஅறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது புகார் மனுவிலும் மேற்படி விபரங்களை மறுத்து கூறவில்லை என்றால் சரியல்ல.

5. எதிரியின் மனைவி நாகலெட்சுமி கடந்த 12.02.2025 அன்று எனக்கும் எனது சகோதரருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **எமசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அறிவிப்பிற்கு நானும் எனது சகோதரரும் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பிலும் வழக்கு காசோலை என்பது சாவித்திரி என்பவரிடமிருந்து நிலம் கிரயம் பெறுவதற்காக எங்களுக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிக்கும் எனக்கும் சட்டப்படி தீர்க்க வேண்டிய கடன் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் நான் புகாரில் கோரியுள்ளவாறு எதிரி எனக்கு எவ்வித தொகையையும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையானது எதிரியால் சட்டப்படி தீர்க்க வேண்டிய கடனுக்காக கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த காசோலை குறித்து எனக்கும் எதிரிக்கும் முறையான ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.